**IN THE HON'BLE COURT OF THE DISTRICT MUNSIF, PAPPIREDDIPATTI.**

**OS.75/2015**

**Deposition of DW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | குமார் (VAO) | Father/Husband's Name | : | ஜடையன் |
| Village | : | கடத்தூர் | Taluk | : | பாப்பிரெட்டிப்பட்டி |
| Age | : | 51 | Calling | : | கிராம நிர்வாக அலுவலர் கடத்தூர் |
| Religion | : | இந்து | | | |

2ம் பிரதிவாதி ஆஜர். வாதியின் வழக்கறிஞர் மற்றும் 1 முதல் 3-ம் பிரதிவாதிகளுக்கான வழக்கறிஞர்கள் ஆஜர்.

**Solemnly affirmed/sworn by Tr.T. Karthick, Assistant, in accordance with the provision Section.6 of Oaths act of 1969 on this 05th day of August 2025.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கடத்தூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கபெற்ற அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை இந்நீதிமன்றத்திற்கு எடுத்து வந்துள்ளேன். கடத்தூர் கிராம புல எண்.21/13-ற்கான சிட்டா, 'அ' பதிவேடு, புல வரைபடம் ஆகியவற்றின் சான்றிட்ட நகல்களை நான் எடுத்து வந்துள்ளேன். கடத்தூர் கிராம புல எண்.21/13-ற்கான சிட்டா, 'அ' பதிவேடு, புல வரைபடம் ஆகியவற்றின் அசல் ஆவணங்களை நான் எடுத்து வந்துள்ளேன். கடத்தூர் கிராம நத்தம் புல எண்.21/13-க்கான சிட்டாவானது அண்ணாமலை மனைவி சுந்தரியம்மாள் (1), சந்திரன் என்கிற சுந்தராசன், த/பெ. அண்ணாமலை (2) ஆகியோரின் பெயரில் உள்ளது. கடத்தூர் கிராம நத்தம் புல எண்.21/13-க்கான 'அ' பதிவேடு சுந்தரியம்மாள் வகையரா பெயரில் உள்ளது. 21.12.2004 அன்று ந.க.சிறப்பு மனு எண்.794/2004-ல் பிறப்பிக்கப்பட்ட

உத்தரவின் அடிப்படையில் புல எண்.21/13–ற்கான சிட்டாவானது அண்ணாமலை மனைவி சுந்தரியம்மாள் மற்றும் சந்திரன் என்கிற சுந்தராசன், த/பெ.அண்ணாமலை ஆகியோரின் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. **புல எண்.21/13–ற்கான சிட்டாவிற்கான சான்றிட்ட நகல் பி.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புல எண்.21/13–ற்கான அ பதிவேட்டின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புல எண்.21/13–ற்கான புல வரைபட சான்றிட்ட நகல் பி.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. கடத்தூர் கிராம புல எண்.21/5 சந்தை புறம்போக்கு என்ற வகைப்பாட்டில் உள்ளது. அதற்கான 'அ' பதிவேடு மற்றும் புல வரைபடத்தை சான்றிட்ட நகல்களை நான் இந்நீதிமன்றத்திற்கு எடுத்து வந்துள்ளேன். **புல எண்.21/5–ற்கான 'அ' பதிவேட்டிற்கான சான்றிட்ட நகல் பி.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புல எண்.21/5–ற்கான புல வரைபட சான்றிட்ட நகல் பி.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. புல எண்.21/5 ஆனது சந்தை புறம்போக்கு நிலம் என்றால் சரிதான். மேற்படி நிலத்திற்கான விஸ்தீரணம் என்னவென்றால் 0.51.5 ஏர்ஸ். நீதிமன்ற அழைப்பாணை கிடைக்க பெற்ற பின்னர் நான் தாவா சொத்தை நேரில் சென்று பார்வையிட்டு வந்தேனா என்றால் பார்வையிட்டேன்.

2. புல எண்.21/13–ல் அமைந்துள்ள நிலத்திற்கான ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்றால் அண்ணாமலை மனைவி சுந்தரியம்மாள் (1), சந்திரன் என்கிற

சுந்தராசன், த/பெ. அண்ணாமலை (2) ஆகியோரின் பெயரில் உள்ளது. மேற்படி புல எண்ணில் அமைந்துள்ள நிலத்திற்கான விஸ்தீரணம் என்னவென்றால் 50 சதுர மீட்டர் ஆகும். மேற்படி புல எண்ணிற்கு மேற்குபுறத்தில் என்ன உள்ளது என்றால் எலக்ட்ரிசியன் கடை உள்ளது. மேற்படி கடையானது Hollow Bricks ஆல் ஆன சிமெண்ட் அட்டை போட்ட கடை ஆகும். மேற்படி கடையின் அருகில் உள்ள புல எண்.21/2–ல் அமைந்துள்ள நிலத்தின் விஸ்தீரணம் என்னவென்றால் 0.10.0 ஏர்ஸ். மேற்படி நிலமானது கிராம நத்தம் நிலமாகும். புல எண்.21/13–ற்கு வடக்கு பகுதியில் என்ன இருந்தது என்றால் சத்தியநாராயணன் என்பவரின் நிலம் உள்ளது. அந்நிலத்தின் சர்வே எண்.277/8 மற்றும் அதன் விஸ்தீரணம் 37 சதுர மீட்டர் ஆகும்.

SARANYA M

Digitally signed by SARANYA M
Date: 2025.08.05 16:22:27 +0100